| F–7821 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT1S1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**First Semester**

தமிழ்

சிறப்புப்பாடம் : சிலப்பதிகாரம் புகார்க் காண்டம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

1. ‘தீதிலா வடமீனின் திறம்’ யாருக்குரியது?

2. கண்ணகியின் நடை குறித்துக் கோவலன் கூறியது யாது?

3. ‘விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்’ யார்?

4. ‘மல்லல் மூதூர்’ என்று இளங்கோவடிகள் எதனைக் குறிப்பிடுகிறார்?

5. மூதின் பெண்டிர் நாளங்காடிப் பூதத்திடம் வேண்டியது யாது?

6. ‘ஆயிரம் கண்ணோன்’ யார்?

7. ‘மாயப் பொய் கூட்டும் மாயத்தாள்’ விளக்கம் தருக.

8. மாதவியின் மடலைக் கோவலனிடம் கொண்டு போய்க் கொடுத்தவர் யார்?

9. சோமகுண்டம், சூரிய குண்டம் ஆகியவற்றின் சிறப்புகளைத் தருக.

10. “முள்ளுடைக் காட்டின் முதுநரி ஆக” சாபம் இட்டவர் யார்? அதற்கான காரணம் யாது?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) 'மாநகர்க்கு ஈந்தார் மணம்' விளக்குக.

(அல்லது)

(ஆ) கோவலன் கண்ணகியைப் புகழ்ந்து கூறிய மொழிகளைத் தருக.

12. (அ) 'தலைக்கோல்' குறித்து இளங்கோவடிகள் தரும் செய்திகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) கோவலனைப் பரிந்த கண்ணகியின் நிலை எவ்வாறிருந்தது?

13. (அ) 'விண்ணவர் தலைவனை விழுநீர் ஆட்டிய பாங்கை' விளக்குக.

(அல்லது)

(ஆ) மாதவியின் முற்பிறப்பு வரலாற்றைத் தருக.

14. (அ) 'மன்னும் ஓர் குறிப்புண்டு இவன் தன்நிலை மயங்கினன்' என்று எண்ணியவர் யார்? அதற்கான பின்புலத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) மாதவியின் மடலை வாங்க மறுத்துக் கோவலன் கூறிய மொழிகள் யாவை?

15. (அ) 'சிலம்புள கொண்ம்' இது யார் கூற்று? அவர் அவ்வாறு கூறக் காரணம் யாது?

(அல்லது)

(ஆ) கவுந்தியடிகள் கூறிய உறுதிமொழி யாது?

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளி.

16. மங்கல வாழ்த்துப்பாடல் சித்திரிக்கும் கோவலன் கண்ணகி மணக்காட்சியை விவரிக்க.

17. அரங்கேற்று காதை தரும் பழங்காலக் கலை மரபுகளை எடுத்துரைக்க.

18. மாதவி பாத்திரத்தின் மாண்புகளைப் புகார்க்காண்டத்தின் வழிநின்று விரித்துரைக்க.

19. கோவலனைப் பிரிந்த கண்ணகி, மாதவி ஆகியோர் நிலைகளை இளங்கோவடிகள் புகார்க்காண்டத்தில் சித்திரிக்கும் பான்மையை விளக்கிக் கட்டுரை தருக.

20. கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளுடன் மதுரைக்குச் சென்ற வழியின் இயல்புகளை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

———————

| F–7822 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT1C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**First Semester**

தமிழ்

இக்கால இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. பாரதியார் கூறும் பிள்ளைக் காதலினைக் கூறுக.

2. மனம் குறித்து பாரதி கூறுவன யாவை?

3. ‘தூர்’ என்ற கவிதையில் நா.முத்துக்குமார் குறிப்பிடுவது யாது?

4. ‘பட்டாம்பூச்சி விற்பவன்’ நூலாசிரியர் யார்?

5. ‘பொன்னகரம்’ என்றால் என்ன?

6. ‘அம்பை’ குறிப்பு வரைக.

7. வல்லிக்கண்ணன் - குறிப்பு வரைக.

8. துணிந்தவன் குறுநாவலின் கதைத் தலைவன் பெயரினைக் கூறுக.

9. நாடகம் என்றால் என்ன?

10. நாடகத்தின் வகைகள் யாவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) பொருட்பெருமை குறித்து பாரதி கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) தன் தந்தை வறுமை எய்தியது குறித்து, பாரதி கூறுவன யாவை?

12. (அ) கவிதை இயற்றும் முறையினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) கடன் பத்திரம் குறித்து நா.முத்துக்குமார் கூறுவன யாவை?

13. (அ) 'குறு நாவல்' குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) அம்பை சிறுகதைகளில் காணலாகும் பெண்ணியக் கருத்துக்கள் குறித்து எழுதுக.

14. (அ) துணிந்தவன் குறுநாவலின் கதைக்களம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) துணிந்தவன் குறுநாவலில் காணலாகும் வாழ்வியல் கருத்துக்கள் குறித்து எழுதுக.

15. (அ) கடமை நாடகத்தில் காணலாகும் சமுதாயக் கருத்தினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) மனிதனின் கடமை குறித்து அரு.சோ கூறுவன யாவை?

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளி.

16. ஆங்கிலவழிக் கல்வி குறித்துப் பாரதி கூறுவன யாவை?

17. பட்டாம்பூச்சி விற்பவன் கவிதைகளில் காணலாகும் மனித வாழ்க்கை குறித்து எழுதுக.

18. 'ஒரு ஊரில் இரண்டு மனிதர்கள்' கதை உணர்த்தும் வாழ்வியல் கருத்துக்களைக் கூறுக.

19. துணிந்தவன் குறுநாவலில் காணலாகும் பாத்திரப்படைப்பு குறித்து மதிப்பிடுக.

20. கடமை நாடகம் குறிப்பிடும் மனித உணவுகள் குறித்துக் கட்டுரை எழுதுக.

---

| F–7823 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT1C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**First Semester**

**தமிழ்**

**இலக்கணம் நன்னூல் (எழுத்து) இலக்கணம் யாப்பு**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** ($10 \times 2 = 20$)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. பாயிரத்தின் வகைகளைக் குறிப்பிடுக.
2. முதலெழுத்துக்கள் யாவை?
3. மொழிக்கு இறுதியில் வரும் மெய்யெழுத்துக்களைக் குறிப்பிடுக.
4. 'உடம்படுமெய்' என்றால் என்ன?
5. தான், தாம் இவற்றோடு ஐ புணரும் போது ஏற்படும் மாற்றத்தை எழுதுக.
6. 'எல்லாம்' என்ற சொல் பெறும் சாரியைகள் யாவை?
7. நிரையசை என்றால் என்ன?
8. ஈரசைச் சீர்களை எழுதுக.
9. குறள் வெண்பாவிற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
10. வஞ்சிப்பாவின் இனங்களைக் குறிப்பிடுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நூலின் பத்து அழகுகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சுட்டு வினா எழுத்துக்கள் குறித்து எழுதுக.

12. (அ) உயிர் முன் உயிர் புணருமாற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) உயிர் எழுத்துக்களின் பிறப்பு குறித்து எழுதுக.

13. (அ) சாரியைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மகரவீற்றுச் சொற்கள் புணரும் இயல்பினை எழுதுக.

14. (அ) சீர்களின் வகைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) தளை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

15. (அ) மருட்பா எவ்வெப்பொருளில் வரும் என்பதை எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆசிரியப்பாவின் வகைகளை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடைதருக.

16. சார்பெழுத்துக்களைச் சான்றுகள் தந்து விளக்குக.

17. எண்ணுப்பெயர்ப்புணர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

18. உருபு புணரியலில் இடம்பெறும் கருத்துக்களை எழுதுக.

19. தொடை, தொடை விகற்பம் குறித்து விரித்தெழுதுக.

20. வெண்பாவின் பொதுவிலக்கணம். அதன் வகைகள் குறித்து விரித்தெழுதுக.

---

| F–7824 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT2S1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Second Semester**

தமிழ்

சிறப்புப் பாடம் - சிலப்பதிகாரம் - மதுரைக்காண்டம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. மதுரைக் காண்டக் காதைகள் எத்தனை?

2. குமரிக்கோடு கடல்கோள் பற்றிய குறிப்பைக் கூறுக.

3. மதுரைக் கோட்டை வாயிலைக் காத்து நின்ற வீரர்கள் யாவர்?

4. கூலவீதியில் கோவலன் கண்டது யாது?

5. ஆய்ச்சியர் காளைகளுக்கு இட்ட பெயர்களைச் சுட்டுக.

6. ஒள்ளெரி உண்ணும் இவ்வூர் - இடம் விளக்குக.

7. தீக்கனாத் திறம் உரைத்தது யார்?

8. வஞ்சிக்கோனைப் புனல்வழித் தேடியவர் யார்?

9. அழற்படுகாதையில் வரும் பூதங்களைக் கூறுக.

10. முற்பிறப்பில் கோவலன் பெயர் யாது?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மாங்காட்டு மறையோன் கூறிய செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) மாதவியின் ஓலைச்செய்தியைக் கூறுக.

12. (அ) கோவலனுக்குக் கவுந்தியடிகள் கூறிய அறிவுரைகளை உரைக்க.

(அல்லது)

(ஆ) கண்ணகி உணவு பரிமாறிய நிகழ்வை விளக்குக.

13. (அ) ஆய்ச்சியர் குரவையில் இடம்பெற்றுள்ள புராணச் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஊரார்முன் கண்ணகி கூறியவற்றை விளக்குக.

14. (அ) கண்ணகி, கோப்பெருந்தேவியிடம் கூறிய அறைகூவல் யாது?

(அல்லது)

(ஆ) பார்ப்பனக் கோலத்து வானவன் கேட்ட வினாவும் பெற்ற விடையும் பற்றிக் கூறுக.

15. (அ) அரச பூதம் பற்றிய கருத்துக்களை உரைக்க.

(அல்லது)

(ஆ) மதுராபதித் தெய்வத்தின் முறையீட்டை உரைக்க.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் <u>கட்டுரை</u> வடிவில் விடை தருக.

16. கோவலன், கண்ணகியின் மதுரைப் பயணத்தை விவரிக்க.

17. கண்ணகி தெய்வமாக்கத்தின் முன்வரைவு-வேட்டுவவரி என்னும் கருத்தை ஆராய்க.

18. சிலப்பதிகாரப் பாண்டியனின் அரசமுறைமையை, வழக்குரைகாதை வழிப்புலப்படுத்துக.

19. கோவலனின் நற்பண்புகள் பற்றிய மாடலனின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

20. பொற்கொல்லன் பற்றிய இளங்கோவடிகளின் சித்தரிப்பினை விவரிக்க.

---

**F–7825**

| Sub. Code |
|---|
| 7BLT2S2 |

## B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022

### Second Semester

### தமிழ்

### சிறப்புப் பாடம் – திருக்குறள் – அறத்துப்பால்

### (CBCS – 2017 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. நீடு வாழ்வார் யார்?

2. பசும்புல் தலைகாணல் அரிது ஏன்?

3. அகத்துறுப்பு எது?

4. ஒருவற்கு அணி எது?

5. அகழ்வரைத் தாங்கும் நிலம் யாருக்கு உவமை?

6. எது இனிது?

7. 'குறியெதிர்ப்பை' என்றால் என்ன?

8. செல்வத்துள் செல்வம் எது?

9. 'நிலத்தறைந்தான்' யார்?

10. சாக்காடு எது போன்றது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) வான் சிறப்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) வாழ்க்கை துணைநலம் என்னும் சொல்லின் அருமையை விளக்குக.

12. (அ) செய்ந்நன்றி அறிதல் தேவையா?

(அல்லது)

(ஆ) ஒழுக்கமுடைமை கருத்துக்களை உரைக்க.

13. (அ) பிறனில் விழைதலின் தீமைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) புறங்கூறாமையின் சிறப்புக்களை விளக்குக.

14. (அ) ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) அருளுடைமையின் மேன்மைகளை விளக்குக.

15. (அ) கொல்லாமை வேண்டுமா? விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) துறவு பற்றிய குறட்கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. இல்வாழ்க்கையின் சிறப்புக்களை விவரிக்க.

17. அன்புடைமை, விருந்தோம்பல் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. தீவினையச்சமும், ஒப்புரவறிதலும் நம் வாழ்க்கையை உயர்ந்த உதவும் பாங்கினை விளக்குக.

19. புலால் மறுத்தலும், தவமும அனைவருக்கும் உரியனவா? விளக்கி வரைக.

20. வள்ளுவரின் அறக்கருத்துக்களைக் கட்டுரைக்க.

---

| F–7826 |
| --- |

| Sub. Code |
| --- |
| 7BLT2C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022.**

**Second Semester**

**தமிழ்**

**அற இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் <u>ஓரிரு</u> வரிகளில் விடையளிக்க.

1. மக்கட்குச் சேர்த்து வைக்கும் செல்வம் யாது?

2. 'இல்பிறந்தார் கண்ணே உள' – கூறக்காரணம் என்ன?

3. 'நன்றியை நன்றாகக் கொளல் வேண்டும்' – ஏன்?

4. 'எள்ளற்க', 'கொள்ளற்க' – என்று குறிப்பிடுவது ஏன்?

5. 'தவசிகள் மாண்பு இனிது' – விளக்கம் தருக.

6. 'கொல்லாமை முன் இனிது' – ஏன்?

7. அவையை அழகுபடுத்துவது எது?

8. நோற்றார் – பொருள் தருக.

9. அரசனின் இயல்பு யாது?

10. மாயூரம் வேத நாயகம் பிள்ளை – குறிப்பு வரைக.

பகுதி ஆ　　　　(5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) கற்றவர் நட்பு, கல்லாதவர் நட்பு குறித்து நாலடியார் கூறுவதனைக் கூறுக.

(அல்லது)

(ஆ) உயர்குடியில் பிறந்தவர்களின் பண்புகள் யாவை?

12. (அ) 'மண்ணி அறிப மணி நலம்' – பாடல் தரும் கருத்துக்களைக் கூறுக.

(அல்லது)

(ஆ) மனைக்குப் பாழ், வாணுதல் இன்மை என்னும் பாடலடி புலப்படுத்தும் நுட்பத்தினைக் கூறுக.

13. (அ) "கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே" என்னும் பாடலின் கருத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'மானிடவர்க்கெல்லாம் இனிதாகும்' என்பனவற்றை எழுதுக.

14. (அ) புறங்கூறாமையினால் வரும் பயன்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தற்புகழ்ச்சி இகழ்ச்சியைத் தரும் என்பதைக் குமரகுருபரர் வழி விளக்குக.

15. (அ) ஞானாசிரியரின் பெருமையினை நீதிநூல் வழி கூறுக.

(அல்லது)

(ஆ) குடிகளின் இயல்பினை மாயூரம் வேதநாயகம் பிள்ளை எங்ஙனம் விவரித்துக் கூறுகிறார்?

## பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்று வினாக்களுக்கு விடையளி.

16. மேன்மக்களின் மேன்மையினை நாலடியார் வழி கூறி விளக்குக.

17. நான்மணிக்கடிகையில் இடம்பெறும் அறக்கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

18. மனித வாழ்வு வளம்பெற, இனியவை நாற்பது கூறும் வாழ்வியல் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

19. கல்வி கற்றலே நனி சிறந்தது எனக்கூறும் நீதிநெறி விளக்கப்பாடல்களின் கருத்துக்களை விளக்குக.

20. அரசின் இயல்புகள், ஞானாசிரியரின் சிறப்புகள் குறித்து நீதிநூல் தரும் கருத்துக்களைக் கூறி விளக்குக.

———————

| F–7827 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT2C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Second Semester**

**தமிழ்**

**இலக்கணம், நன்னூல் (சொல்லும் அணியும்)**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. மூவகை மொழிகளை எழுதுக.

2. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?

3. ஒன்றொழி பொதுச்சொல் என்றால் என்ன?

4. அடுக்குத் தொடர் என்றால் என்ன?

5. ஓகார இடைச்சொல் உணர்த்தும் பொருட்களை எழுதுக.

6. மூவறிவுயிர்கள் - குறிப்பு தருக.

7. தொடர்நிலைச் செய்யுளின் இலக்கணத்தை எழுதுக.

8. குளகம் - பொருள் தருக.

9. தன்மையணி எவ்வெப்பொருளில் வரும்?

10. வேற்றுமையணி என்றால் என்ன?

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடையளிக்க.

11. (அ) சொல்லின் பொதுவிலக்கணத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) இருவகை வழக்குகளை விளக்குக.

12. (அ) பெயரெச்சத்தின் இலக்கணத்தை எடுத்துக்காட்டுகளுடன் எழுதுக.

(அல்லது)

(ஆ) வினையெச்ச வாய்பாடுகள் குறித்து விளக்குக.

13. (அ) 'உம்' எனும் இடைச்சொல் தரும் பொருட்கள் யாவை?

(அல்லது)

(ஆ) உயிர்பொருட்களை நன்னூலார் எவ்வாறு வகைப்படுத்துகிறார்?

14. (அ) காப்பிய இலக்கணம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) செய்யுள் வகை நான்கினைக் குறித்து எழுதுக.

15. (அ) உருவக அணி குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. வேற்றுமை குறித்த இலக்கணக் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

17. பொருள்கோளின் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

18. தொகைநிலைத் தொடர்கள் குறித்து விரித்தெழுதுக.

19. பொது அணியியலில் கூறப்படும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

20. உவமை அணியினை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**F–7828**

**Sub. Code**
**7BLT3S1**

# B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022

## Third Semester

## தமிழ்

## சிறப்புப்பாடம் : சிலப்பதிகாரம் – வஞ்சிக்காண்டம்

## (CBCS – 2017 onwards)

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. 'குன்றவரும் கண்டு நிற்பக் கொழுநனோடு வான் உலகம் சென்றவர்' – விளக்கம் தருக.

2. நீலப் பறவையின் மீது அமர்ந்தவன் என்று குறிப்பிடப்படுபவர் யார்?

3. 'இமயத்தில் வில் எழுதியவன்' – யாரைக் குறிக்கும்?

4. 'துறை சுமந்து நிற்கும் தெல்வர் போல' – விளக்கம் தருக.

5. 'பத்தினி பரவல் வேண்டும்' – யார் கூற்று?

6. நீர்ப்படை செய்தல் – விளக்குக.

7. வஞ்சி சூடுதலுக்கான காரணம் யாது?

8. அழும்பில் வேள் யார்?

9. அரசன் எந்த இடத்தில் பாடி வீடு அமைத்தான்?

10. மாசாத்துவான் யார்? குறிப்பு தருக.

## பகுதி ஆ  (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) சிறு குடியீரே ! சிறு குடியீரே ! என்று ஊரவரை அழைத்துக் குறவர்கள் கூறிய செய்திகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) குரவைக் கூத்தினுள் பாடப்பட்ட பொருள்களை வெளிப்படுத்துக.

12. (அ) பேரியாற்றங்கரையின் வளத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆற்றங்கரையில் எழுந்த பல்வேறு வகையான ஒலிகளை எடுத்துரைக்க.

13. (அ) சாத்தனார் அரசனிடம் கூறிய செய்திகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) செங்குட்டுவன் கூறிய கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

14. (அ) நாடக மகளிரின் செயல்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) மாடலன் அரசனிடம் கூறிய கருத்துக்களைத் தெளிவுபடுத்துக.

15. (அ) சோழர்களின் நிலைமை பற்றி நீர்ப்படைக் காதை வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) தேவந்தி தெய்வம் உற்றுக் கூறியதை எடுத்தியம்புக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. மலை வளம் காணச் சென்ற செங்குட்டுவனிடம் குறவர்கள் உரைத்த செய்தியையும், பரிசுப் பொருள்களையும் விளக்கி வரைக.

17. பத்தினிக் கடவுளுக்கு கோயில் அமைக்க செங்குட்டுவன் செய்த செயல்களை விளக்கிக் கட்டுரை தருக.

18. போர் நிகழ்ச்சியைக் கால் கோட்காதையின் வழிநின்று விளக்குக.

19. 'யாக்கை நிலையாமை' பற்றிய கருத்துக்களை நடுகற்காதை கொண்டு சித்தரிக்க.

20. 'வாழ்த்துக் காதை' கண்ணகியின் வாழ்க்கையை கூறும் பகுதியாக அமைந்துள்ளதைக் கட்டுரையாக வரைக.

| F–7829 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT3S2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Third Semester**

தமிழ்

சிறப்புப் பாடம் — திருக்குறள் – பொருட்பால்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. 'கவிகைக் கீழ் தங்கும் உலகு'-குறிப்புத் தருக.

2. 'செல்வத்துள் எல்லாம் தலை' எது?

3. 'நன்று ஆற்றலுள்ளும் தவறுண்டு'. ஏன்?

4. காக்கை, கூகை உவமையை விளக்குக.

5. குற்றம் கடிதல் யார் தொழில்?

6. யானை அஞ்சுவது ஏன்?

7. இன்பம் விழையான் பெறும் பயன் என்ன?

8. வினைநலம் என்ன தரும்?

9. பாத்தியுள் நீர் சொரிதல் எத்தன்மைத்து?

10. அன்பீன் குழவி எது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) இறைமாட்சியை விளக்குக.

(அல்லது)

(ஆ) கேள்வியின் சிறப்புக்களைத் கூறுக.

12. (அ) தெரிந்து செயல்வகை அதிகாரக் கருத்துக்களைத் தருக.

(அல்லது)

(ஆ) பொச்சாவாமை-தேவையா? அன்றா? விளக்கம் தருக.

13. (அ) வெருவந்த செய்யாமை அதிகாரக் கருத்துக்கள்.

(அல்லது)

(ஆ) ஒற்றாடல் பற்றிய வள்ளுவச் சிந்தனைகளை விவரிக்க.

14. (அ) சொல்வன்மை பற்றிய கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) மன்னரைச் சேர்ந்தொழுகுவது எப்படி? விளக்குக.

15. (அ) அரண் நாட்டுக்குப் பயன்படுமாற்றைக் குறள்வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) பொருள் செய்யும் வகை-வள்ளுவ வழிகாட்டலைக் கூறுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. கல்வியின் சிறப்பு, கல்லாமையின் தன்மை ஆகியவற்றை விவரி.

17. தெரிந்து தெளிதலும், தெரிந்து வினையாடலும் உணர்த்தும் உண்மகளைக் கட்டுரைக்க.

18. ஊக்கம் உடைமையும், ஆள்வினை உடைமையும் ஒருவருக்குத் தேவையா? விளக்கி வரைக.

19. அமைச்சன், தூதன் பற்றிய வள்ளுவரின் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

20. படைமாட்சி, படைச்செருக்கு பற்றிக் கட்டுரைக்க.

———————

| F– 7830 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT3C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Third Semester**

**தமிழ்**

சமய இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

**Time : 3 Hours** **Maximum : 75 Marks**

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. “சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்”- பாடலடியின் பொருள் யாது?

2. திருவெண்ணெய் நல்லூர் எங்குள்ளது? ‘அருட்டுறை’- பொருள் தருக.

3. ‘ஆகமம் ஆகி நின்றண்ணிப்பான் தாள்’- பொருள் தருக.

4. நமசிவாய மந்திரத்தின் சிறப்பு யாது?

5. திருமாலிருஞ்சோலை எங்குள்ளது? அத்தலத்தின் சிறப்பு யாது?

6. ஆண்டாள் குறிப்பு வரைக.

7. இயேசு காவியத்தின் மையக் கருத்து யாது?

8. “உன்னொரு கன்னத்தில் இட்டால் - நீ ஓங்கி அடித்து விடாதே”- யார் யாருக்குக் கூறியது?

9. குணங்குடி மஸ்தான் - குறிப்பு வரைக.

10. பராபரக்கண்ணி என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

11. (அ) சீர்காழியின் சிறப்புகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) திருவெண்ணெய்நல்லூரில் உறையும் பெருமானைச் சுந்தரர் எங்ஙனம் பாடுகிறார்?

12. (அ) மாணிக்கவாசகர் சிவபெருமானை எங்ஙனம் வாழ்த்திப் பாடுகின்றார்?

(அல்லது)

(ஆ) 'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்' என்று மணிவாசகர் பாடக்காரணம் யாது? விளக்குக.

13. (அ) 'கூடிடு கூடலே' என்று ஆண்டாள் பாடும் நோக்கத்தினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) ஆண்டாள், கண்ணனின் திருவடியைப் பற்றிட நெறிப்படுத்தும் செய்திகள் யாவை?

14. (அ) இயேசு காவியத்தின்வழி இயேசுவின் பெருமைகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) எட்டு வகை மனிதர்களைக் குறிப்பிடுக.

15. (அ) குணங்குடி மஸ்தான் சாகிபு இசையுணர்வு மிக்கவர் என்பதைச் சான்றுடன் கூறுக.

(அல்லது)

(ஆ) பராபரக் கண்ணியில் இடம்பெறும் வழிபாட்டுச் சிந்தனைகளைக் குறிப்பிடுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.

16. சிவபெருமானின் பெருமைகளை 'கூற்றாயினவாறு' எனும் தேவாரத்தில் திருநாவுக்கரசர் எங்ஙனம் போற்றிச் சிறப்பிக்கிறார்?

17. சிவபுராணத்தில் மாணிக்கவாசகர் இறைவனின் திருவடிகளைச் சிறப்பித்துப் பாடும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. "கூடிடு கூடலே"- என்று மகுடம் அமைத்து ஆண்டாள் பாடும் கருத்தினை நாச்சியார் திருமொழி வழி விளக்குக.

19. இயேசுநாதர் மலையில் ஆற்றிய சொற்பொழிவின் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

20. இறையுணர்வும் இசையுணர்வும் மிக்கவர் குணங்குடி மஸ்தான் சாகிபு என்பதனைப் பராபரக் கண்ணி வழி நிறுவுக.

---

| F–7831 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT3C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Third Semester**

தமிழ்

இலக்கணம் (அகமும், புறமும்)

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. ஐந்திணைகளைக் குறிப்பிடுக.

2. முல்லைக்குரிய பெரும்பொழுது சிறுபொழுதினை எழுதுக.

3. இயற்கைப் புணர்ச்சி என்றால் என்ன?

4. இருவகைக் குறிகள் யாவை?

5. விரிச்சி என்றால் என்ன?

6. தழிஞ்சி - சிறுகுறிப்புத் தருக.

7. வஞ்சினக்காஞ்சி குறித்து எழுதுக.

8. கந்தழி - துறை விளக்கம் தருக.

9. மூதின் முல்லையின் சிறப்பினைக் குறிப்பிடுக.

10. செவியறிவுறூஉ என்றால் என்ன?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) அறத்தொடு நிற்றல் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஊடலைத் தணிக்கும் வாயில்களை எழுதுக.

12. (அ) இடந்தலைப்பாடு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒருவழித் தணத்தலின் வகைகளை எழுதுக.

13. (அ) தன்னுறு தொழில், மன்னுறு தொழில் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆளெறிபிள்ளை, பிள்ளைத்தெளிவு ஒப்பிடுக.

14. (அ) தானை மறம் பற்றிய செய்தியினை விவரி.

(அல்லது)

(ஆ) வாகைத் திணை காட்டும் அரசனின் சிறப்புக்களை எழுதுக.

15. (அ) மங்கலம் என முடியும் துறைச் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) கொடிநிலை, கந்தழி, வள்ளி ஆகிய துறைகளை விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. களவிற்குரிய கிளவித்தொகைகளை விரித்தெழுதுக.

17. பாங்கியின் மதிஉடன்பாடு குறித்து விளக்குக.

18. பண்டைத் தமிழரின் போர்த்தொடக்கத்தை வெட்சித்திணை வழித் தொகுத்தெழுதுக.

19. வாகைப்படலம் காட்டும் சமுதாயத்தை விரித்தெழுதுக.

20. புறப்பொருள் வெண்பாமாலை காட்டும் ஆற்றுப்படைகளை நிரல்படுத்தி விளக்குக.

———————

| F–7832 |
|---|

| Sub. Code |
|---|
| 7SBS3A1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Third Semester**

தமிழ்

திறன் அடிப்படையிலான பாடம்– கோயிற்கலை

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. சங்ககாலக் கட்டட அமைப்பின் பிரிவுகள் எத்தனை? அவை யாவை?

2. ஓவியங்கள் வரையப்பட்ட இடங்களை எவ்வாறு அழைத்தனர்?

3. தூங்கானைமாடம் என்றால் என்ன?

4. பல்லவர்களுடைய கட்டடக் கோயில்களிலேயே மிகவும் உன்னதச் சிறப்பு உடைய ஆலயம் எது?

5. தகமூரைத் தலைநகரமாக கொண்டு ஆண்டவர் யார்?

6. இராஜராஜனின் இயற்பெயர் யாது?

7. தமிழகத்தில் மண் பொம்மைக்கென்றே நடைபெறும் தனி விழா யாது?

8. காவேரிப் பூம்பட்டினத்தில் மேலையூர் என்ற பகுதியில் கிடைக்கப்பெற்ற உருவம் யாது?

9. பஞ்சலோகம் என்றால் என்ன?

10. சித்தன்னவாசல் அமைந்துள்ள இடம் எங்குள்ளது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் <u>ஒருபக்க</u> அளவில் விடையளிக்க.

11. (அ) சங்ககால கட்டிடக் கலையில் கோயில்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) கூத்துக்கள் பற்றி விவரிக்க.

12. (அ) கோயில்களின் இலக்கணத்தில் அதிட்டானம், சுவர் பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஒற்றைக் கற்கோயில் பற்றி எழுதுக.

13. (அ) மண் சிற்பங்கள் பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கற்சிற்பங்களின் சிறப்பினை விளக்குக.

14. (அ) ஆடவல்லான் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சோழர்கள் காலத்தில் அமைக்கப் பெற்ற கோபுரங்களின் சிறப்பினை விளக்குக.

15. (அ) ஆடல் அணங்குகள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) நாயக்கர் கால ஓவியங்கள் குறித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. ஓவியக்கலையின் தொன்மையினைக் கட்டுரையாக்குக.

17. சோழர்கள் காலக் கோயில்களின் சிறப்புக்களை விளக்குக.

18. தமிழ்நாட்டுக் கோபுரங்களின் சிறப்புகளைத் தொகுத்துரைக்க.

19. செப்புத் திருமேனிகளின் சிறப்பினை எடுத்துரைக்க.

20. விஜய நகர கால ஓவியங்கள் அமையப்பெற்ற சிறப்பினை எடுத்துரைக்க.

| F–7833 |
|---|

| Sub. Code |
|---|
| 7NME3D |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Third Semester**

தமிழ்

துறைசாரா விருப்பப்பாடம் : மக்கள் தகவல் தொடர்பியல்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடைதருக.

1. ‘தலைக்கட்டு’ என்றால் என்ன?
2. ஊர்ப்பஞ்சாயத்து முறையின் வேறுபெயர்கள் யாவை?
3. பேச்சுக்கலையின் இருநிலைகள் யாவை?
4. தேர்ந்தெடுத்த சொல்லாட்சியில் பேசவல்ல இரு தமிழ்ப் பேச்சாளர்களைக் குறிப்பிடுக.
5. பெருமைக்குரிய செப்புப்பட்டயங்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.
6. மாதவி கோவலனுக்கு எத்தனை கடிதம் எழுதினாள்?
7. இந்திய விடுதலையின் போது எந்தெந்த நகரங்களில் வானொலி நிலையங்கள் இருந்தன?
8. தொலைக்காட்சியைக் கண்டறிந்தவர் யார்?
9. ‘காலாடி’ - சொற்பொருள் தருக.
10. சுற்றுச்சூழல் கல்வி என்றால் என்ன?

## பகுதி ஆ  $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடைதருக.

11. (அ) குடும்பன் வெற்றிலை வைத்தல் - விளக்குக.

(அல்லது)

(ஆ) வளமைக் குறியீட்டுச் செய்திப் புலப்பாடு குறித்து விளக்குக.

12. (அ) பேச்சு நிகழ்வுக்குரிய செயல்திட்டம் யாது?

(அல்லது)

(ஆ) நகைச்சுவையுணர்வின் இன்றியமையாமையை விளக்குக.

13. (அ) ஓலைச் சுவடிகள் வழிச் செய்திப் பதிவுமுறைத் தொடர்பியல் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) பத்திரிக்கைகள் வழிச் செய்திப் பதிவுமுறைத் தொடர்பியல் பற்றி விளக்குக.

14. (அ) தொலைக்காட்சியின் சமூகப் பயன்பாடு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கணிப்பொறித் தமிழ் - விளக்குக.

15. (அ) மரபுவழிச் செய்திப் பரப்புச் சாதனங்கள் எவ்வாறு சுற்றுச்சூழல் பற்றிச் செய்தியைப் பரப்புகின்றன?

(அல்லது)

(ஆ) சுற்றுச்சூழல் கல்விப்பணிக்கு தொலைக்காட்சி ஆற்றியுள்ள பணி யாது?

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. நாட்டுப்புறக் கதைகள் வழி கருத்தறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்ச்சிப்படுத்தல் எவ்வாறு செயற்படுகிறது? விளக்குக.

17. சிறந்த பேச்சுக்கலையின் சிறப்புத்தன்மைகளை விளக்குக.

18. அச்சு வழிச் செய்திப் பரவல் குறித்து எழுதுக.

19. தொலைத் தொடர்புச் சாதனங்கள் வழி செய்திப்பரவல் நிகழும் முறைமைகளை விளக்குக.

20. சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக்கு மக்கள் தொடர்புச் சாதனங்களின் பங்களிப்பு பற்றி விவரி.

| F–7835 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT4S1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Fourth Semester**

தமிழ்

சிறப்புப் பாடம் – திருக்குறள் – இன்பத்துப்பால்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                    Maximum : 75 Marks

பகுதி அ                    ($10 \times 2 = 20$)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. காதலால் உள்ளங்கள் பெற்ற பயன்கள் யாவை?

2. 'திருநுதற்கு இல்லை இடம்' – விளக்குக.

3. நெய்யால் எரியை அணைக்க முயல்வது போல – என்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

4. காமநோய் செய்த கண்ணால் ஏற்பட்ட விளைவுகளைக் கூறுக.

5. சாயலும் நாணும் கொண்டவர் யார்? அவர் எதனைப் பறித்துச் சென்றார்?

6. 'மாயும் என் மாய உயிர்' – யாருக்கு? எப்போது?

7. நெஞ்சத்தை யாமத்தும் ஆளுவது எது? காரணம் தருக.

8. தலைவனுக்கு விருந்து வைப்பதற்கு தலைவி விதித்த நிபந்தனைகளை எழுதுக.

9. இன்பத்தின் இயல்புகள் யாவை?

10. 'உள்ளம் உடைக்கும் படை' எது? விளக்குக.

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) நலம் புனைந்துரைத்தல் என்னும் தலைப்பில் வள்ளுவர் கூறும் கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தலைவியின் நலன்களைத் தலைவன் எடுத்துரைக்கும் பாங்கைக் கூறுக.

12. (அ) அலரின் மூலம் தலைவியின் நெஞ்ச உணர்வு எங்ஙனம் வெளிப்படுகிறது?

(அல்லது)

(ஆ) தலைவியின் புலம்பல்கள் 'கண்விதுப்பழிதல்' அதிகாரத்தில் வெளிப்படும் பாங்கினைக் கூறுக.

13. (அ) நினைத்தவர் புலம்பல்களைத் திரு. வள்ளுவர் எடுத்துரைக்கும் பாங்கினை எழுதுக.

(அல்லது)

(ஆ) தலைவியின் அன்புணர்வை, 'தனிப்படர் மிகுதி' அதிகாரம் வழி நின்று விளக்குக.

14. (அ) உறுப்புநலன் அழிதல் இயல்பைத் திருவள்ளுவர் வழி நின்று புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) 'அவர்வயின் விதும்பல்' குறித்துத் திருக்குறள் கூறும் கருத்தை எழுதுக.

15. (அ) தலைவனின் பெருமைகள், 'புணர்ச்சி விதும்பல்' அதிகாரத்தில் எங்ஙனம் வெளிப்பட்டுள்ளது?

(அல்லது)

(ஆ) 'புலவி நுணுக்கம்' அதிகாரத்தின் வழி வெளிப்படும் தலைவியின் அன்புப் பெருக்கைப் புலப்படுத்துக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. குறிப்பறிதல் குறித்துத் திருவள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

17. பிரிவாற்றாமையை, தலைவி கூற்றின் மூலம் எடுத்துரைக்க.

18. காதலின் பிரிவை தலைவி எண்ணிப் புலம்பும் முறைகளை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

19. காதலனைப் பிரிந்தால் ஏற்பட்டுள்ள துன்பத்தைத் தலைவி தன் நெஞ்சிடம் சொல்லுதலை திருவள்ளுவர் எவ்வாறு எடுத்துரைக்கின்றார்.

20. ஊடல் உவகைக் குறித்து வள்ளுவர் தரும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

———————

| F–7837 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT4C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Fourth Semester**

**தமிழ்**

**தொல்காப்பியம் — எழுத்ததிகாரம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

**பகுதி அ**                    $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. தொல்காப்பியர் கூறும் சார்பெழுத்துக்கள் யாவை?

2. மெய்யின் இயக்கம் எதனோடு சிவணும்?

3. 'கான்' சாரியையோடு தோன்றுவது யாது?

4. அதன் + தந்தை – புணர்ந்தமைவது யாது?

5. பலம் என்பது எவ்வகைப் பெயர்?

6. அகர ஈற்று மரப்பெயர் பெறுவது யாது?

7. ஆடு உ + கை - புணர்ச்சியில் இடையில் வரும் சாரியை யாது?

8. பனை + அட்டு - புணர்வது எவ்வாறு?

9. பத்து + இரண்டு - புணரியல்பு எவ்வாறு அமையும்?

10. வன்தொடர் குற்றியலுகரம் எழுதுக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடையளிக்க.

11. (அ) தொல்காப்பியர் கூறும் சார்பெழுத்துக்களின் அமைவினை விளக்குக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியம் பற்றிப் பனம்பாரனார் கூறும் செய்திகளைக் குறிப்பிடுக.

12. (அ) உயிர் எழுத்துக்களின் பொதுப்பிறப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) அளவு நிறைப் பெயர்கள் தம்மிற் புணருமாறு குறித்து எழுதுக.

13. (அ) சாரியை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) ஈகார ஈற்றுச் சொற்புணர்ச்சி காட்டுக.

14. (அ) மகரஈற்றுப் புணர்ச்சியினை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஞகார ஈறு வன்கணத்தோடு புணர்தல் குறித்து விவரிக்க.

15. (அ) நூறு என்பதன் முன் ஒன்று முதலான எண்கள் எவ்வாறு புணர்கின்றன?

(அல்லது)

(ஆ) பெருந்திசையோடு கோணத்திசை புணருமாறு குறித்து எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் எவை? சான்றுகள் காட்டுக.

17. உடனிலை மெய்ம்மயக்கம் பற்றி விளக்குக.

18. ஆகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி இலக்கணம் கூறுக.

19. னகரப் புள்ளியீற்றுச் சொற்களின் புணர்ச்சி இலக்கணம் காட்டுக.

20. மரபு பெயர்ப் புணர்ச்சிகளைத் தொகுத்துரைக்க.

———————

| F–7838 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT4C3 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Fourth Semester**

**தமிழ்**

**சிற்றிலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. நால்வகைப் பாக்களைக் குறிப்பிடுக.

2. கல்லை மலராக நினைத்து வழிபட்ட நாயனார் யார்?

3. தென்னன், பொன்மலை – பொருள் தருக.

4. வெப்பு நோய் கொண்ட அரசன் யார்? அவன் ஆட்சிசெய்த இடம் யாது?

5. அரசன் பவனி வருதலைப் பற்றிக் குறிப்பிடும் நூல் யாது?

6. ஒட்டக்கூத்தர் பாடிய உலா நூலின் பெயர் என்ன?

7. செயங்கொண்டார் பாடிய நூலின் பெயர் என்ன?

8. கலிங்க மன்னனின் பெயர் என்ன? சோழனின் படைத்தலைவன் யார்?

9. நந்திவர்மன் ஆண்ட பகுதி யாது?

10. நன்திவர்மனின் தம்பியின் ஆசை யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) தமிழைத் தூதாக அனுப்புவதற்குரிய காரணங்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

12. (அ) 'அவனி தழைத்திட மவுலி புனைந்தவள் ஆடுக' என்று மீனாட்சியம்மையைக் குமரகுருபரர் பாடக்காரணம் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) மதுரையின் சிறப்புகளைப் பிள்ளைத்தமிழ் வழி கூறுக.

13. (அ) இராசராச சோழனின் பெருமைகளை உலாநூல் வழி குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) பவனி வரும் இராசராச சோழனைக் கண்ட ஏழுபருவ மங்கையரின் நிலையினை விளக்குக.

14. (அ) காளிக்குப் பேய் கூறியனவற்றைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) சித்திர மண்டபத்தில் கூடிய அரசர்களைப் பற்றிக் குறிப்பிடுக.

15. (அ) நந்திவர்மனின் தமிழ்ப்பற்று குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) 'தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்' என்ற பாராட்டக் காரணம் என்ன? விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடையளி.

16. தமிழின் சிறப்பினைத் தமிழ்விடுதூதின் வழி விவரி.

17. குமரகுருபரர், மீனாட்சியம்மனின் சிறப்புக்களாகக் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

18. இராசராச சோழனின் சிறப்புக்களை இலக்கியப்பாடல்கள் வழி விவரி.

19. சோழனின் படையெழுச்சியை, கலிங்கத்துப்பரணி பாடல்கள் வழி நிறுவுக.

20. நந்திவர்மனின் வீரச்சிறப்பினைச் சான்றுடன் விவரித்து எழுதுக.

| F– 7840 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT5S1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Fifth Semester**

தமிழ்

சிறப்புப் பாடம் : நாட்டுப்புறவியல் ஆய்வு

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

பகுதி அ                                        $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. வில்லியம் பாஸ்கம் குறிப்பிடும் நாட்டுப்புறக்கதைகளின் வகைகள் யாவை?

2. முதுசொல்-விளக்குக.

3. விடுகதையின் கருப்பொருட்கள் யாவை?

4. ‘அஞ்சுவரு குராஅல் குரலுந் தூற்றும்’- விளக்குக.

5. பால் அடிப்படையில் பகுக்கப்படும் விளையாட்டுக்களைச் சுட்டுக.

6. இந்திய நாட்டுப்புறக் கட்டடக் கலையின் வகைப்பாடுகளைக் குறிக்க.

7. நம்பிக்கை அடிப்படையில் சூட்டப்பெறும் பெயர்கள் சிலவற்றைக் கூறுக.

8. நாட்டுப்புற இலக்கியத்திற்குரிய பண்புகள் யாவை?

9. ஜேக்கப் கிரீம் குறித்து எழுதுக.

10. இந்திய நாட்டுப்புறவியல் வளர்ச்சியில் சுட்டப்பெறும் மூன்று முக்கிய கால கட்டங்கள் யாவை?

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நாட்டுப்புறவியலின் வகைப்பாடுகளைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) விளையாட்டின்பொழுது (play song) பாடப்படும் பாடல் ஒன்றினை எழுதுக.

12. (அ) சமயம் சார் நாட்டுப்புறக்கலைகள் யாவை?

(அல்லது)

(ஆ) குலக்குறி வழிபாடு குறித்து எழுதுக.

13. (அ) சிறுவர் விளையாட்டுக்கள் எவையேனும் இரண்டினை விளக்குக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறவியல் தொழில்நுட்பம் என்றால் என்ன?

14. (அ) உடலமைப்பை மையமிட்டுச் சூட்டப்பெறும் பெயர்கள் யாவை?

(அல்லது)

(ஆ) வினா நிரல் தயாரித்தலில் பின்பற்றப்படவேண்டிய வழிமுறைகளைக் கூறுக.

15. (அ) இந்திய நாட்டுப்புறவியல் தோற்றம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோட்பாடுகள் யாவை?

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

ஏதேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழிலக்கியங்களில் பழமொழி பெறும் இடம் குறித்து விளக்குக.

17. தமிழக நாட்டுப்புறக்கதைகளின் வகைப்பாடுகளைச் சுட்டி விளக்குக.

18. நாட்டுப்புறத் தொழில்நுட்பவியல் குறித்துக் கட்டுரைக்க.

19. கள ஆய்வில் பின்பற்றவேண்டிய நடைமுறைகள் குறித்து விளக்குக.

20. தமிழக நாட்டுப்புறவியல் வரலாற்றை விளக்கிக் கட்டுரை வரைக.

———————

| F–7841 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT5C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Fifth Semester**

**தமிழ்**

**சங்க இலக்கியம் - அகம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours　　　　　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. ‘இனியவோ பெரும’ விளக்குக.

2. ஏதிலாளர் சுடலை - யாருக்கு உவமை?

3. ‘இவண் உறை வாழ்க்கை அரிய!’ - யார் கூற்று?

4. ‘மலர் தீய்ந்தனையர், நின் நயந்தோரே!’ - விளக்குக.

5. ‘வேளாப் பார்ப்பான்’ - விளக்குக.

6. குறும்பொறை நாடன் - எத்திணைத் தலைவன்?

7. நொதுமலர் என்றால் என்ன?

8. தேன் மயங்கு பாலினும் இனியது எது?

9. மருதக்கலியின் முதற்பொருளைக் கூறுக.

10. மருத நிலக் கருப்பொருள் மூன்றனைக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பாலை நில விலங்குகளின் அன்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) இரவலர் வாரா வைகல் - இதன் பின்னணியில் உள்ள பண்பாட்டு மரபினை விளக்குக.

12. (அ) தோழி அலர் அச்சம் தோன்றச் சொல்லி வரைவு கடாய செய்திகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) சாதலும் இனிதே-காதலம் தோழி !- என்றது யார்? ஏன்? விளக்குக.

13. (அ) வினை முற்றிய தலைமகனின் உள்ளத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பருவம் கண்ட தலைமகன் உள்ளக் கருத்தினை உரைக்க.

14. (அ) ஐங்குறுநூற்றுப் பாடல்களின் தொகுப்புமுறையை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஐங்குறுநூற்றுத் தலைவி தாய்மீது கொண்ட அன்பினை உரைக்க.

15. (அ) நீர் முற்றுதலன்றிப் போர் முற்றுதல் அறியான் யார்? விளக்குக.

(அல்லது)

(ஆ) கலித்தொகையின் காமக்கிழத்தி பற்றி நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. பாலை பாடிய பெருங்கடுங்கோவின் பாடற்சிறப்புகளை நும் பாடப்பகுதி கொண்டு கட்டுரைக்க.

17. நெய்தல் உரிப்பொருளை அம்மூவனார் புனையும் திறத்தை விளக்குக.

18. அகநானூற்றுப் பாடல்கள் உணர்த்தும் தலைமக்கள் அன்பினைக் கூறுக.

19. ஐங்குறுநூற்றுக் குறிஞ்சிப்பாடல்களின் சிறப்பினை விவரி.

20. தலைமக்களிடையே காணப்பெறும் ஊடலை மருதக்கலி வழி உரைக்க.

———————

**F–7842**

**Sub. Code**
**7BLT5C2**

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Fifth Semester**

தமிழ்

தொல்காப்பியம் - சொல்லதிகாரம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. அஃறிணைப் பாடல்கள் எவை? சான்று தருக.

2. வழக்கின் வகைகள் குறித்து எழுதுக.

3. நான்காம் வேற்றுமைப் பொருளை விளக்குக.

4. கருமமல்லாச் சார்பென் கிளவி - சான்று தருக.

5. சொற்களின் பாகுபாடுகள் எவை?

6. வினை என்பது யாது?

7. இடைச்சொல்லின் இயல்பு குறித்து எழுதுக.

8. வழுமத்தின் பொருளவாய உரிச்சொற்கள் எவை?

9. பொருள்கோளின் வகைகளை எழுதுக.

10. பெயரெச்சம் என்பது என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பல பொருள் ஒருசொல் அமையுமாறு குறித்து எழுதுக.

12. (அ) ஐந்தாம் வேற்றுமைப் பாகுபாடுகள் யாவை?

(அல்லது)

(ஆ) ஆகுபெயர் இயல்பை விவரிக்க.

13. (அ) பெயர்ச்சொல்லின் இலக்கணம் யாது?

(அல்லது)

(ஆ) வினைச் சொற்களின் வகைகளை விளக்குக.

14. (அ) இடைச் சொற்களின் பாகுபாடு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கடி என்னும் உரிச்சொல் உணர்த்துங் குறிப்புகள் யாவை?

15. (அ) அன்மொழித் தொகை என்பது யாது?

(அல்லது)

(ஆ) ஈ, தா, கொடு - அமையுமாறு குறித்துக் கூறுக.

## பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. கிளவியாக்கம் கூறும் தொடரியல் அமைப்பு குறித்து விளக்கி வரைக.

17. இரண்டாம் வேற்றுமைப் பொருள் மற்றும் பாகுபாடுகளைக் கட்டுரையாக்குக.

18. விரவுப் பெயர்கள் குறித்து விளக்கியுரைக்க.

19. எண்ணிடைச் சொற்களை விளக்குக.

20. தொகைகளின் வகைகளை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

———————

| F–7843 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT5C3 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Fifth Semester**

தமிழ்

தமிழ் இலக்கிய வரலாறு

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

1. தொல்காப்பியத்தின் அதிகார அமைப்புக் குறித்து எழுதுக.
2. ‘ஐங்குறுநூறு’ பெயர்க்காரணம் தருக.
3. ‘திணைமொழி ஐம்பது’ நூலாசிரியர் யார்?
4. ஐஞ்சிறு காப்பியங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
5. ‘கலம்பகத்தின்’ இலக்கணம் தருக.
6. தமிழில் தோன்றிய பொருள் இலக்கண நூல்கள் யாவை?
7. ‘உச்சிமேற்புலவர்கொள்’ என்று போற்றப்பெற்ற உரையாசிரியர் யார்?
8. ‘கீர்த்தனை நாடகம்’ குறிப்பு வரைக.
9. கண்ணதாசன் எழுதிய நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
10. தமிழில் தோன்றிய முதல் புதின நூலின் பெயர் யாது? அதன் ஆசிரியர் யார்?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தொல்காப்பியத்தின் தனிச்சிறப்புகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) ஆற்றுப்படை இலக்கணம் தந்து, பத்துப்பாட்டு நூல்களுள் இடம்பெறும் ஆற்றுப்படை நூல்களைப் பட்டியலிடுக.

12. (அ) மருந்துப் பொருள்களின் பெயர்களைக் கொண்டமைந்த அறநூல்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) 'இரட்டைக் காப்பியங்கள்' குறித்து விளக்கியுரைக்க.

13. (அ) சிற்றிலக்கியம் குறித்த வரையறை தந்து, உலா மற்றும் தூது நூல்கள் பற்றி விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) யாப்பு மற்றும் அணியிலக்கண நூல்கள் குறித்து எழுதுக.

14. (அ) உரையாசிரியர்களின் தமிழ்த்தொண்டினை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) கிறித்தவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டினைப் புலப்படுத்துக.

15. (அ) மரபுக்கவிதை, புதுக்கவிதை ஆகியவற்றில் ஏற்பட்ட புத்தெழுச்சியைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ்ப் புனைகதையுலகில் புதினங்கள் பெறும் சிறப்பினை விளக்கி எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளி.

16. பண்டைத் தமிழர்களின் வாழ்வியல் மாண்புகளைச் சங்க இலக்கியம் எவ்வாறு எடுத்துரைக்கின்றது என்பது குறித்துக் கட்டுரை தருக.

17. நீதி இலக்கியங்கள் பற்றிய அறிமுகம் தந்து அவற்றுள் திருக்குறள் பெறும் தனிச்சிறப்பினைத் தக்க சான்றுகள் தந்து விளக்குக.

18. சைவ, வைணவ சமயங்கள் தமிழுக்குச் செய்த பங்களிப்புக் குறித்துக் கட்டுரைக்க.

19. நாடகத்தமிழின் தோற்றம் வளர்ச்சி குறித்துக் கட்டுரை எழுதுக.

20. தமிழ்ப்புனைவிலக்கியத்தில் சிறுகதை மற்றும் புதினங்கள் பெறும் சிறப்பினைத் தக்க சான்றுகளுடன் விரித்துரைக்க.

———————

| F–7844 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLTE1A |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022.**

**Fifth Semester**

தமிழ்

விருப்பப்பாடம் – மொழிபெயர்ப்பியல்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

பகுதி அ　　　　(10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை யளி.

1. எளியவினை எதிர்காலத்தினைக் குறிப்பிடுக.

2. இறந்தகால தொடர் வினையைக் குறிப்பிடுக.

3. துணைவினைகள் இரண்டினைக் கூறுக.

4. வருணனை வாக்கியங்களில் படர்க்கை ஒருமை பெண்பால் பயனிலைகள் எவ்வாறு அமையும் என்பதனைக் கூறுக.

5. வினைச் சொல்லுடன் கூடிய எழுவாயினைக் குறிப்பிடுக.

6. ஒரே சொல்லால் ஆன மொழிப்பெயர்ப்பு முறையினைக் குறிப்பிடுக.

7. Faceis the index of the mind என்பதன் மொழிபெயர்ப்பு யாது?

8. திரு கேசவன் அளித்த மொழிபெயர்ப்பு யாது?

9. Pyrrhic என்ற சொல்லுக்கு எத்தனை பொருள் உள்ளன?

10. Jealous என்பதை மொழிபெயர்க்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை யாது?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மொழிபெயர்ப்பில் எளிய வினை இறந்த காலம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பில் எளிய வினை நிகழ் காலம் அமைய வேண்டிய முறையினைக் குறிப்பிடுக.

12. (அ) தமிழில் அமையும் துணை வினைகளின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தன்மை, முன்னிலை, படர்க்கை பயன்பாடு வருணனை வாக்கியங்களில் அமையும் முறையினை எழுதுக.

13. (அ) மொழிபெயர்ப்பில் வினையாலணையும் பெயர்களின் பங்களிப்பினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பில் உவமைத்தொகை, உம்மைத்தொகை பயன்படுத்தும் முறையினைக் கூறுக.

14. (அ) மு.வ.வின் மொழிபெயர்ப்பு குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) எஸ்.வி.ராஜதுரை மறுத்தெழுதும் மொழிபெயர்ப்பு குறித்து எழுதுக.

15. (அ) மொழிபெயர்ப்பாளரின் தனித்தன்மையைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பாளர்க்கு ஏற்படும் இடையீடு குறித்து எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மொழிபெயர்ப்பில் வினைச்சொற்கள் பயனிலைகளாக அமையும் முறை குறித்து எழுதுக.

17. வருணனை வாக்கியங்கள் மொழிபெயர்க்க வேண்டிய முறையினைப் புலப்படுத்துக.

18. மொழிபெயர்ப்பில் நீண்ட தொடர்கள் எவ்வாறு மொழிபெயர்க்கப்படுகின்றன என்பதைக் கூறுக.

19. சமகால மொழிபெயர்ப்புக் குறித்து மதிப்பிடுக.

20. மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஏற்படும் சிக்கல்கள் குறித்து எழுதுக.

———————

| F– 7847 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLTE2B |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Fifth Semester**

**தமிழ்**

விருப்பபாடம் – பெண்ணியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி

1. சோஷலிசப் பெண்ணியக் கருத்தினைக் கூறுக.

2. பழமைவாத பெண்ணியம் சார்ந்த அறிஞர் இருவரைக் குறிப்பிடுக.

3. தேவதாசி முறை ஒழிப்புச் சட்டத்தினைக் கூறுக.

4. உடன்கட்டை ஏறுதல் தடைச் சட்டத்தினைக் கூறுக.

5. பெண்மைத் திறனாய்வு என்றால் என்ன?

6. மார்க்சியப் பெண்ணிய ஆய்வு என்பது யாது?

7. சமதர்மப் பெண்ணியம் என்றால் என்ன?

8. புகழ்பெற்ற பெண்ணிய நாடகங்களைக் கூறுக.

9. பெண்ணிய அரங்கு வளர்ச்சியினைக் கூறுக.

10. கருப்புப் பெண்ணியம் என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பெண்ணியத்தின் தேக்க நிலை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பெண்ணிய விடுதலை இயக்கத்தினைக் குறிப்பிடுக.

12. (அ) மகளிர் அமைப்புகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பெண்களின் வாக்குரிமை குறித்து எழுதுக.

13. (அ) பால் அடிப்படையிலான மொழியியல் வேறுபாடு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வாஸந்தியின் நாவல்களில் பெண்ணிய நோக்குக் குறித்து எழுதுக.

14. (அ) பெண்ணிய நோக்கில் பெரியபுராணம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பின் நவீனத்துவமும் பெண்ணியமும் குறித்துக் கூறுக.

15. (அ) பெண்ணியச் சிந்தனை எழுச்சி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பெண் சித்தரிப்பில் தமிழ் இதழ்களின் பங்கு யாது?

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. பெண்ணியம் தோன்றக் காரணங்கள் குறித்து எழுதுக.

17. இந்தியப் பெண்களின் சமூக நிலை குறித்து எழுதுக.

18. பெண்ணியக் கோட்பாடுகளும் அதன் தேவையும் குறித்துக் கட்டுரை எழுதுக.

19. சங்க இலக்கியங்களில் பெண்ணியம் மறுபார்வை குறித்து எழுதுக.

20. நாவல்களில் காணலாகும் பெண்ணியம் குறித்துக் கட்டுரை வரைக.

**F–7848**

**Sub. Code**
**7SBS5A1**

## B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022

**Fifth Semester**

**தமிழ்**

**திறன் அடிப்படையிலான பாடம்: கணிப்பொறிக் கல்வி**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

**பகுதி அ**                    $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. சேமிப்புச் சாதனங்களைக் இரண்டினைக் கூறுக.

2. கணிப்பொறியில் சேமித்தல் விளக்குக.

3. நினைவகம் என்றால் என்ன?

4. தமிழ் மின்நூலக இணைய தளங்கள் இரண்டினைக் கூறுக.

5. மின்னஞ்சல் - குறிப்பு வரைக.

6. இணையம் என்றால் என்ன?

7. உள்ளீட்டுக் கருவிகள் இரண்டினைச் சுட்டுக.

8. சாளரம் என்றால் என்ன?

9. கணிப்பொறி - அச்சப்பொறி - விளக்குக.

10. பைனரி எண் என்றால் என்ன?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கணிப்பொறியை இயக்கும் முறை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கணிப்பொறியின் பயன்கள் சிலவற்றை கூறுக.

12. (அ) கணினியின் வாயிலாகக் கற்றலில் நிகழும் நிறை குறைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) வலைதளத் தொடர்புகள் குறித்து எழுதுக.

13. (அ) தாளில் எழுதுதல், கனினியின் எழுதுதல் நிறை குறைகளைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) எம் எஸ் சொல் செயலிக்கும் எக்ஸெலுக்கும் உள்ள வேற்றுமைகள் யாவை?

14. (அ) பல் ஊடகம் (Multi media) குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) உயர் பனுவல் (Hyper text) என்றால் என்ன?

15. (அ) வெளியீட்டுக் கருவிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(அல்லது)

(ஆ) வலைதள கருவிகளைக் குறிப்பிட்டு விளக்குக

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும் <u>கட்டுரை</u> வடிவில் விடை தருக.

16. கணிப்பொறியின் தலைமுறை வகைகளைக் குறிப்பிட்டுக் கட்டுரைக்க.

17. கணிப்பொறியில் பயன்படுத்தப்படும் வெவ்வேறு இயக்க அமைப்புகள் குறித்து விவரிக்க.

18. மென்பொருள்களின் வகைகளைச் சுட்டி விளக்குக.

19. கல்வி பயிற்றலில் கணிப்பொறியின் பயன்பாடுகளை விளக்கி வரைக.

20. இணையத்தின் பயன்களைச் சான்றுகளோடு விளக்கி எழுதுக.

———————

| F–7849 |
|---|

| Sub. Code |
|---|
| 7SBS5A2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Fifth Semester**

தமிழ்

திறன் அடிப்படையிலான பாடம் : நாடகக்கலை

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. நாடக அரங்கம் பற்றிக் கூறும் தமிழ்க் காப்பிய நூல் எது?

2. நாடகம் என்றால் என்ன?

3. எந்த அரசவம்சத்தில் நடிகர்களுக்கு மானியம் வழங்கப்பட்டது?

4. நாட்டுப்புறவியல் நாடகங்கள் இரண்டின் பெயர்களை எழுதுக.

5. புகழ்பெற்ற நாடகக் குழுக்களின் பெயர் ஒன்றினைச் சுட்டுக.

6. நாடகத்தில் இடம்பெறும் பொதுவான முக்கியப்பாத்திரம் ஒன்றினைக் குறிப்பிடுக.

7. 18 - ஆம் நூற்றாண்டு நாடகங்களில் செல்வாக்குப் பெற்றவை எவை?

8. குறவஞ்சி நாடகம் ஒன்றினைச் சுட்டுக.

9. தமிழ்நாடகப் பேராசிரியர் யார்?

10. அண்ணாவின் நாடகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் அளவில் விடை தருக.

11. (அ) மாதவி ஆடிய பதினோரு ஆடல்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சங்ககாலக் கூத்து வகைகள் யாவை?

12. (அ) 'நாட்டுப்புற நாடகம்' என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) 'மேடை நாடகம்' - அமைப்பினை விளக்குக.

13. (அ) நடிக்கும் நாடகம், படிக்கும் நாடகம் - வேறுபாடுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தற்காலத் தமிழ் நாடகங்கள் பற்றி விளக்குக.

14. (அ) நொண்டி நாடகம் - சான்று தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பள்ளு நாடகம் - விளக்குக.

15. (அ) தமிழ் மேடை நாடக வளர்ச்சிக்குப் பங்காற்றிய ஆளுமைகளுள் ஒருவரின் தொண்டினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) திராவிட இயக்கங்களில் நாடகம் குறித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சங்ககாலம் தொடங்கித் தமிழ் நாடக வரலாறு குறித்து எழுதுக.

17. நாட்டுப்புற நாடகத்தின் வாழ்வும் தாழ்வும் குறித்து எழுதுக.

18. தமிழ் நாடகத் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

19. 17 -ஆம் நூற்றிண்டில் தமிழ் நாடகத்தின் நிலை குறித்து எழுதுக.

20. இன்றைய தமிழ் நாடகம் - மதிப்பிடுக.

———————

| F–7851 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT6C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Sixth Semester**

**தமிழ்**

**சங்க இலக்கியம் - புறம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

**பகுதி அ**                    (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. பிறர் வறுமை நோக்கி வழங்கிய வள்ளல் யார்?

2. ‘யார்கொல் அளியள்’ - இது யார் கூற்று?

3. ‘மழையணி குன்றத்துக் கிழவன்’ என்று வன்பரணர் - யாரைக் குறிப்பிடுகிறார்?

4. ‘பறம்பின் கோமான்’ - யார்?

5. மன்னாவுலத்து மன்னுதல் குறித்தோர் செய்தது யாது?

6. ‘உலைக்கல் அன்ன வல்லாலின்’ - யார்?

7. பதிற்றுப்பத்து - குறிப்பு வரைக.

8. மோகூர் மன்னன் முரசம் கொண்டவன் யார்?

9. ‘ஆற்றுப்படை’ - பொருள் தருக.

10. 'உமணர்' - பொருள் தருக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் <u>ஒரு பக்க</u> அளவில் விடை தருக.

11. (அ) "கொடைமடம் படுதல் அல்லது படைமடம் படான்" - யார்? விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) "இஃது யாம் இரந்த பரிசில்" - என்று பேகனிடம் பரணர் கூறியது யாது? விளக்குக.

12. (அ) தன் புகழ் தன்னெதிரே கேட்க நாணியவன் யார்? அவனை வன்பரணர் எவ்வாறு வாழ்த்துகிறார்?

(அல்லது)

(ஆ) "எழுவர் மாய்ந்த பின் உன்னை எண்ணி வந்தேன்" என்று பெருஞ்சித்திரனார் யாரைக் குறிப்பிட்டுப் பாடுகிறார்? விளக்கம் தருக.

13. (அ) இளவெளி மானைப் பெருஞ்சித்திரனார் யாது கூறிப் புகழ்கிறார்?

(அல்லது)

(ஆ) "கழைவளர் இமயம் போல" - என்று ஆவூர் தலைப்பில் மூலங்கிழார் யாரை வாழ்த்துகிறார்? விளக்கம் தருக.

14. (அ) "ஊன் துவை அடிசில்" - எனும் தலைப்பில் பதிற்றுப்பத்துப்பாடல் தரும் செய்திகளைத் தருக.

(அல்லது)

(ஆ) "காஞ்சியம் பெருந்துரை மணலினும் பலவே" என்று பரணர் செங்குட்டுவனைப் பாராட்டக் காரணம் யாது? விளக்குக.

15. (அ) விறலியர் தம் அழகினைக் கேவதிபாத வருணனையாகச் சிறுபாணாற்றுப்படை எவ்வாறு எடுத்தியம்புகிறது?

(அல்லது)

(ஆ) சிறுபாணாற்றுப்படையில் இடம்பெறும் விருந்தோம்பல் பண்பினை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்றனுக்குக் <u>கட்டுரை</u> வடிவில் விடை தருக.

16. சங்கப் புலவர்கள் பேகனைப் பற்றிப் பாடிய பாடல்களின் செய்திகளை நும்பாடப் பகுதிகொண்டு விளக்குக.

17. குமணவள்ளலின் கொடைச்சிறப்பைப் பெருஞ்சித்திரனார் வழிநின்று விளக்குக.

18. பண்டைத் தமிழ் மன்னர்களின் கொடைச்சிறப்பையும், வீரப் பெருமிதத்தையும் புறநானூற்றுப் பாடல்கள் எவ்வாறு எடுத்துரைக்கின்றன என்பதை விளக்கிக் கட்டுரை தருக.

19. பதிற்றுப் பத்தின் ஐந்தாம் பத்து வழி, வெளிப்படும் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனின் வீரம் மற்றும் கொடைச் சிறப்பினை விளக்கிக் கட்டுரை தருக.

20. நல்லியக்கோடனின் வரலாற்றைச் சிறுபாணாற்றுப்படை நூல் எவ்வாறு சித்தரிக்கின்றது?

———————

| F–7852 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT6C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2022.**

**Sixth Semester**

தமிழ்

தொல்காப்பியம் - பொருளதிகாரம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. பெருமையும் உரனும் யாருக்கு இயல்பு?

2. பாங்கன் நிமித்தம் - எத்தனை?

3. 'வன்புறை' - என்றால் என்ன?

4. பொருள் வயிற்பிரிவு - குறிப்பு வரைக.

5. 'உடன் போக்கு' - விளக்கம் தருக.

6. அச்சம் தோன்றுவதற்கான காரணிகளைத் தருக.

7. இரட்டைக் கிளவி - என்றால் என்ன?

8. உவமப் போலி எத்தனை வகைப்படும்?

9. 'பறழ்' - பொருள் தருக.

10. போத்து எனக் குறிக்கப் பெறுபவை யாவை?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) களவொழுக்கத்தின் இயல்புகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) தலைவி கூற்று நிகழும் இடங்களைக் குறிப்பிடுக.

12. (அ) கற்பியலில் தலைவன் கூற்று நிகழுமாற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) கற்பியலில் தோழி கூற்று நிகழும் இடங்களை விவரிக்க.

13. (அ) வரைவு கடாதல் மற்றும் அதன் முறைமையை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகளை எடுத்துரைக்க.

14. (அ) உவமையின் சிறப்பியல்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) உள்ளுறை உவமத்தை விளக்குக.

15. (அ) இளமைப் பெயர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) 'நேரிதின் உணர்ந்தோர்' நெறிப்படுத்தியது - யாது?

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. களவில் தலைவன் கூற்று நிகழும் இடங்களை விவரிக்க.

17. கற்பின்கண் தலைவி கூற்று நிகழும் இடங்களை விளக்கிக் கட்டுரை தருக.

18. எண்வகை மெய்ப்பாடுகளைத் தக்க சான்றுகளுடன் விளக்கிக் கட்டுரை எழுதுக.

19. உவமயியல் செய்திகளைத் தொகுத்துரைக்க.

20. ஆண்பால், பெண்பால் பெயர்கள் குறித்து மரபியல் கூறும் செய்திகளை விளக்குக.

———————